
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
(1995 - 96)
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

அரசு உறுதிமொழிக் குழு

(1995 - 96)

(பத்தாவது சட்டமன்றப் பேரவை)

மூப்பதாவது அறிக்கை

(பேரவைக்கு அளிக்கப்பெற்ற நாள்: 3 NOV 1997)

சட்டமன்றப் பேரவைச் செயலகம்
சென்னை – 600 009

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

அரசு உறுதிமொழிக் குழு

(1995-96)

(பத்தாவது சட்டமன்றப் பேரவை)

முப்பதாவது அறிக்கை

சட்டமன்றப் பேரவைச் செயலகம்
சென்னை-600 009

53-333—A

பொருளடக்கம்.

பக்கங்கள்.

குழுவின் அமைப்பு iii

அறிக்கை.

(i) முகவுரை — .. .. .. — v

(ii) குழுவின் கூட்டங்கள் .. .. — v

(iii) பொதுக் குறிப்புரைகள் v

இணைப்புகள்.

1. 1995–96 ஆம் ஆண்டிற்கான குழுவால் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப் பெற்ற உறுதிமொழிகளின் துறை வாரியான விவரம் .. 1—9

2. அளிக்கப்பெற்ற உறுதிமொழிகள், அவற்றுள் நிறைவேற்றப் பெற்றவை அல்லது படித்துப் பதிவு செய்யப் பெற்றவை மற்றும் நிலுவையில் உள்ள உறுதிமொழிகள் குறித்த ஆண்டு வாரியான பட்டியல் — 10

3. நிலுவையில் உள்ள உறுதிமொழிகள் குறித்த துறைவாரியான மற்றும் ஆண்டு வாரியான பட்டியல் .. 11—12

4. குழு கூடிய நாட்கள் பற்றிய விவரம் — 13

5. நிறைவேற்றப் பெற்ற / படித்துப் பதிவு செய்யப்பெற்ற உறுதிமொழிகளின் சதவீதம் — 14

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1995-96 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் அமைப்பு.

(20-6-1995 ஆம் நாளன்று அமைக்கப்பெற்றது).

தலைவர்—

1. திரு. ஆர். சிங்காரம்

உறுப்பினர்கள்—

2. திரு. ஆ. சுப்புரத்தினம்
3. திரு. சிங்கை கோவிந்தராசு
4. திரு. க. பழனிசாமி
5. திரு. என். ஆர். சிவபதி
6. திரு. எ.டி. செல்லச்சாமி
7. திரு. ஜெ. பன்னீர்செல்வம்
8. திரு. வே. பெரியசாமி
9. டாக்டர் ச. சுந்தரராஜ்
10. திரு. ஆ. பாலையா
11. திரு. எ. தெய்வநாயகம்
12. திரு. எஸ்.எஸ். ராமசுப்பு

செயலகம்—

திரு. செ.சு. ஜானகிராமன், செயலாளர்.

திரு. தா. ஜேக்கப் ஆர்த்தர், கூடுதல் செயலாளர்.

திருமதி. பானுமதி ஆனந்தராஜன், அணைச் செயலாளர்.

திருமதி நா. துளசிபாய், சார்புச் செயலாளர்.

அரசு உறுதிமொழிக் குழு.

(பத்தாவது பேரவை).

மூப்பதாவது அறிக்கை.

பெறுநர்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை,
சென்னை.

(i) முகவுரை :

1. 1995–96 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் (பத்தாவது சட்டமன்றப் பேரவை) மூப்பதாவது அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

2. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 248 (i) ஆம் விதியின் கீழ் 1995-96 ஆம் ஆண்டிற்கான குழு, 1995 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 20 ஆம் நாளன்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களால் நியமனம் செய்யப்பெற்றது.

(ii) குழுவின் கூட்டங்கள் :

3. குழு, 1995-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 29 ஆம் நாளன்று சென்னையில் கூடிய தனது முதல் கூட்டத்தில் ஏற்கெனவே நிலுவையாக உள்ள உறுதிமொழிகள் குறித்து அரசு எடுத்த நடவடிக்கைகள் பற்றி ஆய்வு செய்யலாம் என முடிவெடுக்கப் பட்டது. மேலும், 1995 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 14 ஆம் தேதி முதல் மேமாதம் 4 ஆம் தேதி வரை நடைபெற்ற சட்டமன்ற பேரவைத் தொடரின் நடவடிக்கை குறிப்புகளிலிருந்து எடுக்கப்பெற்ற அரசு உறுதிமொழிகளுக்கு குழு ஒப்புதல் அளித்தது.

4. குழு, சென்னை மற்றும் இதர மாவட்டங்களில் கூடிய நாட்கள் பற்றிய விவரம் இணைப்பு (4)-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

5. பேரவையில் அமைச்சர்களால் கொடுக்கப்பெற்று, ஏற்கெனவே நிலுவை யாக உள்ள உறுதிமொழிகள் குறித்து அரசு எடுத்த நடவடிக்கைகள் பற்றிய அறிக்கை களை குழு மேற்படி கூட்டங்களில் ஆய்வுக்கு எடுத்துக் கொண்டது. நிறைவேற்றப் பெறாத உறுதிமொழிகள் குறித்து சம்பந்தப்பட்ட மாவட்டங்களுக்கு ஆய்வுப் பயணம் மேற்கொண்டும் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாவட்ட அதிகாரிகளை நேரில் விசாரணை செய்தது மேலும், சம்பந்தப்பட்ட பல்வேறு துறைகளைச் சார்ந்த அரசுச் செயலாளர்களை நேரில் சந்தித்து உறுதிமொழிகள் குறித்து கலந்துரையாடியது. நிறைவேற்றப்பெற்றவையாக குழுவினால் கருதப்பட்ட உறுதிமொழிகள் பற்றிய விவரங்கள் இணைப்பு-1ல் கொடுக்கப்பட்டுள்ளது.

6. இவ்வறிக்கையில் திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்டங்கள் குறித்த உறுதிமொழிகள் மட்டுமே எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

(iii) பொதுக் குறிப்புரைகள் :

7. பேரவையில் அளிக்கப்படும் உறுதிமொழிகளின் மீது குறிப்பிட்ட கால அள விற்குள் நடவடிக்கைகள் முற்றுப்பெற வேண்டும் என்பதை குழு வலியுறுத்துகிறது.

8. குழுவின் இந்த அறிக்கைக்கு 1995 ஆம் ஆண்டு நவம்பர் 2 ஆம் நாள் நடைபெற்ற கூட்டத்தில் ஒப்புதல் வழங்கப்பெற்றது.

ஆர். திங்காரம்,
தலைவர்.

சென்னை-600 009,
2–11–1995,
ஐப்பசி 16, யுவ
திருவள்ளுவர் ஆண்டு 2026.

இணைப்பு-1.

1995-96 ஆம் ஆண்டிற்கான குழுவால் நிறைவேற்றப்பெற்றனவாக முடிவு செய்யப்பட்ட உறுதிமொழிகள் குறித்த துறை வாரியான விவரம்.

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம்.

ஊரக வளர்ச்சித்துறை.

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	பார்வை.	பொருள்.	துறை எடுத்த நடவடிக்கை பற்றிய விவரம்.
(1)	(2)	(3)	(4)	(5)
1	528/90	உடுக்குறியிடாத வினா எண். 7654, திரு. கே. ரவி அருண், எம்.எல்.ஏ., 26—8—1990.	திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், வி.பெரும் பேரூராட்சி, ராமலிங்கம் தெரு, பூந்தோட்டம் தெரு, அருந்ததியர் தெரு, சாலை தெரு, அம்பலவாணபுரம் தெரு, கட்டபுளித்தெரு, மீனாட்சிபுரம் தெரு, ஆகிய பகுதிகளில் வசிக்கும் மக்கள் உபயோகித்து வரும் சுடுகாட்டுப் பாதைகள் எப்போது சீர் செய்யப்படும் என்பது குறித்து.	திருநெல்வேலி - கட்டபொம்மன் மாவட்டம் விக்கிரமசிங்கபுரம் பேரூராட்சி மக்கள் வசிக்கும் கடுகாட்டுப் பாதையை செப்பனிடும் பணிக்கு ரூ. 1.35 இலட்சம் செலவுக்கான மதிப்பீடு அனுமதிக்கப்பட்டுள்ளது. எனினும் இவ்வூர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 1.35 இலட்சமும், பேரூராட்சியின் நிதியிலிருந்து ரூ. 0.40 இலட்சமும் செலவில் மயான பாதை செப்பனிடும் பணிகள் நடைபெற்று வருகின்றன கிராவல் பரத்தும் பணி முடிவடைந்துள்ளது. கருங்கல் ஜல்லி பரப்பும் பணி முன்னேற்றத்தில் உள்ளது. 31—3—1995-க்குள் பணிகள் முடிக்கப்படும்.
2	263/93	உடுக்குறியிடாத வினா எண். 4857, திரு. எஸ்.எஸ். ராமசுப்பு, எம்.எல்.ஏ., நாள் 13—4—1993.	திருநெல்வேலி - கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் ஒன்றியம், உச்சிப்பொத்தை கிராம அருந்ததியர் மக்களுக்கு இலவச வீடுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா என்பது குறித்து.	திருநெல்வேலி - கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் ஒன்றியத்தைச் சேர்ந்த உச்சிப் பொத்தை கிராம அருந்ததியர் மக்களுக்கு 1992-93 ஆம் ஆண்டு இவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் 11 தொகுப்பு வீடுகள் அனுமதிக்கப்பட்ட அவை அனைத்தும் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன.

கால்நடை பராமரிப்பு மற்றும் மீனளத் துறை

3	137/91	உடுக்குறியிட்ட வினா எண். 1314, துணை வினா திரு. பே. தருமலிங்கம், எம்.எல்.ஏ., 18—9—1991.	பாளையங்கோட்டை தாலுகா, கால்நடை மருத்துவமனையை விரிவுபடுத்தி அங்கே எக்ஸ்ரே கருவி, கால்நடை அறுவை சிகிச்சை அறை போன்றவற்றை ஏற்படுத்த அரசு முன்வருமா என்பது குறித்து	இவ்வுறுதி மொழி பரிசீலிக்கப்பட்டு 1995-96ஆ ஆண்டு பகுதி இரண்டு திட்டத்தில் சேர்க்கப் பட்டு, தகுந்த ஆணையிடப்பட்டுள்ளது. (அரசு ஆணை நிலை எண். 122, கால் நடை பராமரிப்பு மற்றும் மீனளத் துறை, நாள் 6-7-1995) நகல் இத்துடன் இணைக்கப் பட்டுள்ளது.

1

Copy of

GOVERNMENT OF TAMIL NADU.

ABSTRACT

Animal Husbandry– Strengthening of Veterinary Hospital at Palayamkottai by providing X-ray unit and operation theatre—Part II Scheme 1995-96—Orders—Issued.

[*G.O. Ms. No.* 122, *Anima Husbandry and Fisheries* (*AH.* 3), *dated* 6th *July* 1995.]

ORDER :

Palayamkottai is one of the important Municipalities in Tirunelveli Kattabomman District where a large number of elite crossbred animals, Sheep, Goat and also valuable pet animals are being reared by the farmers and pet lovers. At present on an average, 75 cases are being treated daily at the Veterinary Hospital, Palayamkottai. Though the hospital is located in a permanent building, it lacks in modern diagnostic facilities like X-ray Unit and Operation Theatre with modern facilities.

2. At present four X-ray units are avilable at Clinician Centres Salem, Madurai and Polyclinics at Coimbatore and Saidapet. Due to vast increase in Vehicular traffic a number of animals are involved in accidents and the Veterinary Surgeon it finding in difficult to locate fractures and diagonise exact nature of fracture for want of modern diagnostic equipments. Further due to introduction of intensive crossbred programme the elite crossbred animals have become more prone to Surgical and Gynaecological Complications. The Directhr of Animal Husbandry has therefore submitted proposal for strengthening of Veterinary Hospital at Palayamkottai by providing X-ray Unit and Operation Theatre at a cost of Rs. 9.00 lakhs under Part II Scheme for 1995-96.

3. The Government accept the proposal and accord sanction for Rs. 7.35 lakhs (Rs. seven lakhs and thirty five thousands only) (Recurring 0.80 lakhs and non-recurring 6 55 lakhs) as detailed in the Annexure to this order for strengthening of Veterinary Hospital at Palayamkottai by providing X-ray Unit and Operation Theatre under Part II Scheme for 1995-96.

4. Government also accord sanction of one post of Radiographer in the scale of (Rs. 1,350—30—1440—40—1800—50—2,200) to the Veterinary Hospital, Palayamkottai for a period of one year from the date of appointment or till the necessity ceases whichever is earlier.

5. The Director of Animal Husbandry is directed that the post of Radiographer sanctioned in para 4 above be filled up by redeployment ony He is also requested to furnish the details of deployment of the above post along with the details of G.O in which the post was sanctioned and last continued, etc., before filling up the posts.

6. The expenditure sanctioned in para 3 above shall be debited to "2403 00 Animal Husbandry 101 Veterinary Services and Animal Health Schemes in the Eighth Five Year Plan—II State Plan" K M—Strengthening Veterinary Hospital (DPC No. 2403 00 101 K M 009).

7 This order issues with the concurrence of the Finance Department *vide* its U. O No. 41008/CMPC/95-1, dated 24th May 1995.

(By Order of the Governor).

M. AHMED,
Secretary to Government.

ANNEXURE.

RECURRING

	Rupees in lakhs
01 *Salaries*	
1. Pay	0.18
2. Dearness Allowance	0.20
4. Other Allowances	0.02
X-ray films and Chemicals, etc	0.40
Total	0.80

NON-RECURRING

02 Contingencies	
Furniture	0.05
16 Major Works	3.50
19 Machinery and Equipments	3.00
Total	6.55

Total (Recurring Rs. 0.80 lakhs) (Non Recurring Rs. 6.55 lakhs) –Rs. 7.35 lakhs.

(Forwarded by Order).

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY LIBRARY
TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	பார்வை.	பொருள்.	அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள்.
(1)	(2)	(3)	(4)	(5)
4	140/95	பால்வளத்துறை மாவியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கு மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை 19-4-1995.	திருநெல்வேலி கூட்டபொம்மன் மாவட்டம் ஒருங்கிணைந்த பால் பண்ணை வளர்ச்சித் திட்ட மொன்று அமைக்க அரசு ஆணை செய்யுமா என்பது குறித்து.	திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் நிதி உதவியுடன் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தின்கீழ் பால் உற்பத்தியை பெருக்க, ரூ. 705 இலட்ச மதிப்பீட்டு செலவில் ஒரு பால் பண்ணை நிறுவ அரசு ஆணை எண். 1394இ, வேளாண்மை, நாள் 15—7—87-ல் ஆணையிடப்பட்டது. பின்னர் மேற்படி மதிப்பீட்டுச் செலவு ரூ. 705 லட்சத்திலிருந்து ரூ. 640 லட்சங்களாக மாற்றலாம் என கருதப்பட்டது. இதற்கு அடுத்து 16—12—94-ல் நடந்த திட்டக் குழுக் கூட்டத்தில் மறுபடியும் மேற்படி திட்டத்தை ரூ.705 இலட்சங்கள் செலவில் அமுலாக்கலாம் என முடிவு எடுக்கப்பட்டது. கீழ்க் குறிப்பிட்டுள்ளவாறு இத்திட்டத்திற்கென அரசால் இதுவரை ரூ. 640இலட்சங்கள் வழங்கப்பட்டு உள்ளது. தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழக கடன் .. ரூ. 448 இலட்சம். அரசின் பங்கு .. ரூ. 139.125 இலட்சம். மான்யம் .. ரூ. 52.875 இலட்சம். தேசியக்கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் இதுவரை இத் திட்டத்திற்கான செலவில் ரூ. 353.50இலட்சங்கள் தமிழக அரசுக்கு திருப்பி அளித்துள்ளது. திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்ட பால் வளர்ச்சித் திட்டத்தை நடத்த மீதமுள்ள ரூ.65இலட்சத்தை அரசு வழங்க வேண்டும் என 30—1—95-ல் பால்வள ஆணையர் கருத்துரு அனுப்பியுள்ளார். இது குறித்து நிதித்துறையுடன் கலந்து ஆலோசிக்கப்பட்டது. திட்டக் குறியீடு அறிக்கை, திட்ட செலவின விவரங்கள் மற்றும் திட்ட மதிப்பீட்டுச் செலவு ரூ. 705இலட்சத்திற்கான தேசியக்கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் ஒப்புதல் ஆகிய விவரங்கள் சேகரிக்கப்பட்டு மேலே குறிப்பிடப்பட்டுள்ள ரூ. 65 இலட்சம்தொகைக்கு ஒப்புதல் வேண்டிய கோப்புஎண். 3203/94 நிதித்துறையின் ஆய்வில் தற்போது உள்ளது.

(அ.சா.கு. எண். 16279/பா.உ. 2/95-1, நாள் 28—9—95.)

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை.

வரிசை எண்	உறுதி மொழி எண்.	பார்வை.	பொருள்.	துறையின் பதில்.
(1)	(2)	(3)	(4)	(5)
(5)	40/95	உடுக்குறியிடாத வினா எண். 1537 திரு. எஸ். எஸ். ராம சுப்பு, எம்.எல்.ஏ., 24-3-1995	திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் தொகுதி, மானூர் ஒன்றியம், கீழப்பிள்ளையார் குளம் ஊராட்சி அல்லை இந்திரா நகரில் ஆழ்துளைக் கிணறு அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா என்பது குறித்து	இந்தப் பணி நிறைவேற்றப்பட்டது.

பொதுப்பணித்துறை.

(1)	(2)	(3)	(4)	(5)
(6)	175/92	உடுக்குறியிட்ட வினா 1022, திரு. ஆர். ஈஸ்வரன், எம்.எல். ஏ., 25—3—1992.	உள்ளார் நீர்த்தேக்கத் திட்டம், கோம்பை ஆறு அணைத் திட்டம், செண்பகவல்லி அணைத் திட்டம் ஆகிய திட்டங்களை விரைந்து நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா என்பது குறித்து.	1. உள்ளார் நீர்த்தேக்கத் திட்டம் : திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில், சிவகிரி வட்டத்தில் உள்ள காட்டு ஆறுகளின் குறுக்கே உள்ளார் நீர்த்தேக்கம் அமைக்க, ஒரு விரிவான மதிப்பீடு ரூ. 16.68 கோடிக்கு (1990-91 விலை விகிதப்படி) தயாரிக்கப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது. இத் திட்டத்திற்கு தேவையான வன நிலங்கள் பெறுவதற்கான வனத்துறையின் அனுமதி பெற நடவடிக்கை எடுக்கப்படுகிறது. கோம்பையாறு நீர்த்தேக்கத் திட்டம் : திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், சிவகிரி வட்டம், கோம்பை ஆற்றின் குறுக்கே அணைக்கட்டும் திட்டத்தை, அரசு வருவாய் வாரியத்தின் பரிந்துரைப்படி போதிய அளவு நீர்வரத்து இராது என்பதால் ஏற்றுக் கொள்வதில்லை என்று அரசு முடிவு செய்துள்ளது. செண்பகவல்லி அணைத் திட்டம் : இத்திட்டம் தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்களால் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

குழுவின் குறிப்புரை.

(6)

இவ்வுறுதிமொழி முடிக்கப்பெற்றதாகக் குழு முடிவு செய்தது.

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	பார்வை.	பொருள்.	அரசு எடுத்துள்ள நடவடிக்கை.
(1)	(2)	(3)	(4)	(5)
(7)	566/93	வினா எண். 9378 கே. தர்மலிங்கம், சட்டமன்ற உறுப்பினர். 38—4—93,	பாளையங்கோட்டை மேலப்பாளையத்திலுள்ள பாளையம் கால் வாய்களை மராமத்து செய்துதர அரசு முன் வருமா?	நிதி நிலைக்கேற்ப பணிகள் மேற்கொளளப்பட்டு நீர் போக்குவரத்து தடையின்றி நடைபெற வகை செய்யப்பட்டு வருகிறது.
(8)	326/94	உடுக்குறியிடாத வினா எண். 20736, திரு. எஸ். எஸ். இராமகப்பு, ச.ம.உ., 3—11—94.	திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் ஒன்றியம், கரண்டை—மேல்கடலங்குல் சாலையிலுள்ள ஓடையில் பாலம் அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா என்பது குறித்து.	இப்பாலம் அமைக்க வேண்டிய இடம் இருந்தால் ஒழியே— கீழக்கலங்கல் சாலை (அரசு இதர மாவட்ட சாலை) கி. மீ. 2/6-ல் உள்ள பள்ளத்தில் அமைக்கப்பட வேண்டும். இவ்விடத்தில் மழை காலங்களில் மட்டும் நீர்வரத்து இருக்கும். இதனால் போக்குவரத்து சில மணி நேரங்களுக்கு பாதிக்கப்படும். இந்த பள்ளத்தை உயர்த்தி தரை மட்ட தாம்போதி கட்ட சுமார் ரூ. 2.00 இலட்சம் தேவைப்படும். இப்பணியை எதிர் வரும் காலங்களில் நிதி பணிகள் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும்.

போக்குவரத்துத் துறை.

வரிசை எண்.	உறுதி எண்.	பார்வை.	பொருள்.	அரசு எடுத்துள்ள நடவடிக்கை.
(1)	(2)	(3)	(4)	(5)
9	162/95	உடுக்குறியிட்ட வினா எண். 20154, துணை வினா திரு. டி., வேலையா, எம்.எல்.ஏ., 25—4—1995.	திருநெல்வேலியில் காலை, மாலை நேரங்களில் புறநகர் பகுதியிலிருந்து நெரிசலை தவிர்க்க கட் சர்வீஸ் விட அரசு ஆவன செய்யுமா என்பது குறித்து.	26—7—1995 அன்று திருநெல்வேலி மாவட்ட அட்வியர் அலுவலகத்தில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் சட்டமன்ற உறுதிமொழி எண் 162/95 பரிந்துரைத்தப்படி பேட்டை, தாழையூத்து சமாதானபுரம் ஆகிய பகுதிகளுக்கு திருநெல்வேலியிலிருந்து காலை, மாலை கூட்ட நேரங்களில் மூன்று நகரப் பேருந்துகள் மூலம் கட் சர்வீஸ் அறிமுகப்படுத்தப்பட்டு 7-8-1995 முதல் இயங்கி வருகிறது.

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை.

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	பார்வை.	பொருள்.	அரசு எடுத்துள்ள நடவடிக்கை.
(1)	(2)	(3)	(4)	(5)
10	312/94	உடுக்குறியிடாத வினா எண். 13811, திருமதி ரமணி நல்லதம்பி, எம்.எல்.ஏ., 3—11—1994.	ராதாபுரம் தொகுதி, இசையன் விளை மருத்துவமனையில் உள்ள உள்நோயாளிகள் தங்க முடியாத நிலையில் இருப்பதால் இதை அரசு கவனிக்குமா என்பது குறித்து.	இப்போதுள்ள சூழ்நிலையில் ஏற்கெனவே உள்ள 6 படுக்கைகளுக்கே நோயாளிகள் வந்து சேர்வ தில்லை. இந்நிலையில் படுக்கைகளை இன்னும் கூடுதலாக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

கன்னியாகுமரி மாவட்டம்.

பொதுப்பணித் துறை.

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	பார்வை.	பொருள்	துறை எடுத்துள்ள நடவடிக்கை.
(1)	(2)	(3)	(4)	(5)
11	10/93.	உடுக்குறியிடாத வினா எண் 8732, டாக்டர் தே. குமார தாஸ், ச.ம.உ., நாள் 8—2—1993.	கன்னியாகுமரி மாவட்டம், பழுது அடைந்துள்ள சென்னித் தோட்ட பாலத்தை செப்பனிட அரிடம் இடம் உள்ளதா ? எப்பொழுது செயல்படுத்தப்படும் ?	உறுதிமொழியில் சீர் செய்யக் கோரியுள்ள சென்னை தோட்டம் பாலமானது, நெடுஞ்சாலைத் துறை யின் பராமரிப்பில் உள்ள மாவட்டப் பெருஞ் சாலையாக குழித்துறை, தேங்காப்பட்டினம் சாலை கி.மீ. 1/0ல் அமைந்துள்ளது. தற்போது வலுவிழந்துள்ள செங்கற்கள் கொண்டு கட்டப் பட்டுள்ள பாலத்திற்கு பதிலாக புதிய பாலம் ஒன்று கட்டுவதற்கு தோராயமாக ரூ. 20.00 லெட்சங்கள் தேவைப்படும். இப்பணி அரசு ஆணை நிலை எண். 257, போக்குவரத்துத் துறை, நாள் 24—3—1988-ல் ஒப்புதல் வழங்கப்பட்ட பணித் தொகுப்புப் பட்டியலில் இடம் பெற் றுள்ளது. எனினும், அரசு திட்டப் பணிகளுக் கென குறைந்த அளவே நிதி ஒதுக்கீடு செய்து வருவதால், இப்பணியினை பகுதி 2 திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்ய இயலவில்லை. எனவே, எதிர்வரும் ஆண்டுகளில் பணியின் முக்கியத்துவம் பணியின் அவசர அவசியம் மற்றும் நிதிநிலையை கருத்திற்கொண்டு இப்பாலப் பணியை செயல் படுத்துவது குறித்து பரிசீலனை செய்யப்படும்.

வணிகவரி மற்றும் அறநிலையத்துறை.

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	பார்வை.	பொருள்.	அரசு எடுத்துள்ள நடவடிக்கை.
(1)	(2)	(3)	(4)	(5)
12	166/95	இந்து சமய அறநிலையத்துறை மானிய கோரிக்கையின் மீதான விவாதத்திற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுரை, 25-4-1995.	திருச்செந்தூர் சங்கரநாராயண சுவாமி திருக்கோயில் மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆகிய திருக்கோயில்களில் கும்பாபிஷேகம் நடைபெறுமா என்பது குறித்து.	சங்கரன்கோயில் அருள்மிகு சங்கர நாராயணசுவாமி திருக்கோயிலில் 5—7—1995 அன்றும், மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலில் 7—7—1995 அன்றும், திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் 9—7—1995 அன்றும் கும்பாபிஷேகங்கள் நடைபெற்றுள்ளன.

வருவாய்த்துறை.

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	பார்வை.	பொருள்.	அரசு எடுத்த நடவடிக்கை.
(1)	(2)	(3)	(4)	(5)
13	102/92	உடுக்குறியிடாத வினா எண் 438, திரு. இரா. நடேசன், எம்.எல்.ஏ., 16—3—1992.	கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள மிகப்பெரிய தாலுக்காவான கல்குளம் தாலுக்காவை இரண்டாகப் பிரிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா என்பது குறித்து.	1995 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியல் திருத்தும் பணியினைத் தொடர்ந்து அப்பணி முடிவடையும் வரை ஆட்சி எல்லைகளில் மற்றும் நிர்வாகத்தில் மாற்றம் ஏதும் செய்யக்கூடாது என பொது (தேர்தல்) துறை தடை விதித்துள்ளதாலும், நிதிநிலை இடமளிக்கவில்லை என்பதாலும், அரசு இதனை ஏற்பதற்கில்லையென அறிக்கை அளிக்கப்பட்டுள்ளது.

திண்டுக்கல் மாவட்டம்.

வருவாய்த்துறை

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	பார்வை.	பொருள்.	அரசு எடுத்துள்ள நடவடிக்கை.
(1)	(2)	(3)	(4)	(5)
14	311/91	பொதுப்பணித்துறை மானியக் கோரிக்கையின் மீது அமைச்சரின் பதில், 26—9—1991.	மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்கள் கட்டுவது குறித்து.	**சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் :** சென்னை இராஜாஜி சாலையில் பழைய உயர்நீதி மன்றக் கட்டிடம் இருந்த இடத்தில் சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டிடம் ரூ. 632 இலட்சம் செலவில் கட்டப்பட்டு வருகிறது. கட்டிடப் பணி முடியும் தருவாயில் உள்ளது.

திதம்பரனார் மாவட்டம், மீளவிட்டான் கிராமத்தில் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்துக்குச் (SIPCOT) சொந்தமான நிலத்தில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் கட்ட வேண்டி ரூ. 281 இலட்சத்திற்கு அரசின் நிர்வாக மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசாணை நிலை எண். 2569, வருவாய்த்துறை, நாள் 28—12—1990;ல் ஆணைகள் வெளியிடப்பட்டன. மேற்படி அலுவலகக் கட்டிடம் கட்ட தேர்வு செய்யப்பட்ட நிலத்தினை கையகப்படுத்துவதை எதிர்த்து நில உரிமையாளர்கள் நீதிமன்றத்தில் தடையாணைப் பெற்றதின் காரணத்தினாலும், கற்றுப்புறச் சூழல் கெடுதியினாலும் இத்திட்டம் கைவிடப்பட்டு, தூத்துக்குடி மாவட்டம், மீளவிட்டான் கிராமம், தொழிற்பயிற்சி நிலையத்திற்கு சொந்தமான 30.00 ஏக்கர் மற்றும் தூத்துக்குடி நகராட்சிக்கு சொந்தமான 30.47 நிலம் சேர்த்து 60.47 ஏக்கர் நிலத்தில் திதம்பரனார் மாவட்ட பெருந்திட்ட வளாகம் கட்ட அரசாணை (நிலை) எண். 713, வருவாய்த்துறை, நாள் 25—8—1993;ல் திருத்திய நிர்வாக ஒத்திசைவு வழங்கப்பட்டது. மேற்கண்ட நிலத்தில் திதம்பரனார் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மூன்று அடுக்கு மாடிகள் கட்டிடம் கட்ட கட்டிட வரைபட மற்றும் மதிப்பீடுகள் முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையரிடமிருந்து பெறப்பட்டு ரூ. 400 இலட்சத்தில் திதம்பரனார் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் கட்ட அரசின் நிர்வாக மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசாணை (நிலை) எண். 416, வருவாய்த்துறை, நாள் 18—5—1995ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது.

இணைப்பு 2.

அளிக்கப்பெற்ற உறுதிமொழிகள், அவற்றுள் நிறைவேற்றப்பெற்றவை மற்றும் நிலுவையில் உள்ள உறுதிமொழிகள் குறித்த ஆண்டு வாரியான பட்டியல்.

ஆண்டு.	அளிக்கப்பெற்ற உறுதிமொழிகள்.	நிறைவேற்றப் பெற்றதாகக் கருதப்பெற்றவை.	நிலுவையில் உள்ளவை.
(1)	(2)	(3)	(4)
1983 ..	335	334	1
1984 ..	274	274	..
1985 ..	461	458	3
1986 ..	681	677	4
1987 ..	635	621	14
1989 ..	390	383	7
1990 ..	548	533	15
1991 ..	376	358	18
1992 ..	480	443	37
1993 ..	747	661	86
1994 ..	360	211	149
1995 ..	197	4	193
(அக்டோபர் வரை)			527

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

53-333—4

இணைப்பு 3.

நிலவையிலுள்ள உறுதிமொழிகள் குறித்த துறை வாரியான மற்றும் ஆண்டுவாரியான பட்டியல்.

வரிசை எண்.	துறை.	1983	1984	1985	1986	1987	1989	1990	1991	1992	1993	1994	1995	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)	(12)	(13)	(14)	(15)
1.	ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை.	..	..	..	..	..	..	2	1	5	3	8	9	28
2.	உள்துறை	..	..	..	..	..	..	..	1	..	4	3	24	32
3.	ஊரகவளர்ச்சித்துறை	..	..	..	..	1	..	1	1	2	5	10	9	39
4.	கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்துறை.	..	..	..	..	1	..	..	1	3	3	13	6	27
5.	கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத்துறை.	..	..	..	..	..	..	1	..	3	5	2	8	19
6.	கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை.	..	..	..	..	..	..	..	..	..	..	1	3	4
7.	கைத்தறி, கைவினைப் பொருட்கள் துணிநூல் மற்றும் கதர்த்துறை.	..	..	..	..	..	..	..	..	—	2	..	11	13
8.	சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை.	..	..	..	..	..	..	..	..	..	4	5	4	13
9.	சட்டத்துறை	..	..	..	..	..	..	..	..	—	—	..	1	1
10.	சட்டமன்றப் பேரவைச் செயலகம்	..	..	..	..	..	..	..	..	..	..	..	..	..
11.	சுற்றுப்புறச் சூழல் மற்றும் வனத்துறை.	..	..	..	..	..	..	..	..	..	..	4	5	9
12.	செய்தி மற்றும் சுற்றுலாத்துறை	..	..	..	..	2	1	1	1	2	1	3	8	19
13.	தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாட்டுத் துறை.	..	..	..	..	..	..	..	..	—	—	..	1	1
14.	திட்டம் மற்றும் வளர்ச்சித்துறை	..	..	..	..	..	..	..	..	..	..	..	..	..
15.	தொழில் துறை	..	..	..	..	1	..	..	2	1	..	1	3	8
16.	தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை.	..	..	..	..	..	..	..	..	..	2	3	1	6

வரிசை எண்ணும் துறையும்.		1983	1984	1985	1986	1987	1989	1990	1991	1992	1993	1994	1995	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)	(12)	(13)	(14)	(15)
17.	நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை.	..	..	..	2	3	1	2	1	5	13	5	11	43
18.	நிதித்துறை	..	..	..	..	..	..	..	..	..	...	...	2	2
19.	பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை.	..	..	..	..	..	..	..	..	..	..	..	..	..
20.	பிற்பட்டோர் மற்றும் மிகவும் பிற்பட்டோர் நலத்துறை.	..	..	..	..	..	..	..	..	..	..	...	2	2
21.	பொதுத்துறை	..	..	..	..	..	..	1	..	..	..	1	..	2
22.	பொதுப்பணித்துறை	..	..	2	2	6	2	5	6	8	24	54	29	138
23.	போக்குவரத்துத் துறை	..	..	..	..	..	..	1	..	..	2	9	20	32
24.	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை.	..	..	..	..	..	..	..	..	..	5	7	6	18
25.	மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை.	..	..	..	..	..	..	..	..	..	..	..	1	1
26.	வணிகவரி மற்றும் அறநிலையத் துறை.	1	..	..	..	..	..	..	..	1	..	3	5	10
27.	வருவாய்த்துறை	..	..	1	..	..	1	1	3	4	3	11	8	32
28.	வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை.	..	..	..	..	..	1	..	..	1	2	1	4	9
29.	வேளாண்மைத்துறை	..	..	..	..	..	..	..	..	1	4	2	9	16
30.	எரிசக்தித் துறை	..	..	..	..	..	1	..	..	1	3	3	2	10
31.	சிறுதொழில் துறை	..	..	..	..	..	..	..	1	..	1	..	1	3
	மொத்தம்	1	..	3	4	14	7	15	18	37	86	149	193	527

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு 4.

(அறிக்கை பத்தி 4)

குழு கூடிய நாட்கள் பற்றிய விவரம்.

நாள்.	குழுக்கூட்டம் நடைபெற்ற இடம்.
(1)	(2)
29—06—1995 ..	சென்னை
24—07—1995 ..	திருநெல்வேலி-கடடபொம்மன்
25—07—1995 ..	கன்னியாகுமரி
26—07—1995 ..	சிதம்பரனார்
27—07—1975 ..	
28—07—1995 ..	
23—08—1995 ..	
24—08—1995 ..	புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர்.
25—08—1995 ..	
11—09—1995 ..	சென்னை
12—09—1995 ..	செங்கை-எம்.ஜி.ஆர்.
25—09—1995 ..	நீலகிரி
26—09—1995 ..	கோவை
27—09—1995 ..	பெரியார்
04—10—1995 ..	சென்னை
05—10—1995 ..	
10—10—1995 ..	திண்டுக்கல்-அண்ணா
11—10—1995 ..	மதுரை
12—10—1995 ..	காமராஜர்
13—10—1995 ..	இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்.
25—10—1995 ..	வட ஆற்காடு-அம்பேத்கார்.
26—10—1995 ..	திருவண்ணாமலை-சம்புவராயர் விழுப்புரம் இராமசாமி படையாச்சியார்.

இணைப்பு 5.

நிறைவேற்றப்பெற்ற/படித்துப் பதிவு செய்யப்பெற்ற உறுதிமொழிகள்/சதவீதம்.

வரிசை எண்.	ஆண்டு	நிலுவையாக உள்ள உறுதிமொழிகளின் எண்ணிக்கை.			நிறைவேற்றப்பெற்ற/படித்துப் பதிவு செய்யப் பெற்ற உறுதிமொழிகள்		
		ஆண்டுத் தொடக்கத்தில்.	மேலும் சேர்த்துக் கொள்ளப் பட்டவை.	மொத்தம்.	ஆண்டு இறுதியில்.	எண்ணிக்கை.	சதவீதம்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
1	1989 ..	1,655	721	2,376	1,835	541	23
2	1990 ..	1,825	497	2,332	1,565	767	32.9
3	1991 ..	1,565	375	1,940	1,186	754	38.7
4	1992 ..	1,186	890	2.076	1,041	1,035	49.9
5	1993 ..	1,041	521	1,562	433	1,129	72.3
6	1994 ..	474	318	792	331	461	58
7	1995 .. (அக்டோபர் வரை)	344	197	541	*	527	...

(*) ஆண்டு முடிவுறவில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலகம்

அரசு உறுதிமொழிக் குழு

1995-96 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் மூன்றாவது அறிக்கையில் பிழையும், திருத்தமும்.

பக்கம்	பத்தி	வரி	பிழை	திருத்தம்
1	1	12	திகள்	பதிகள்
1	3	1	1995-96 ஆ	1995-96 ஆம்
2		3	Anima	Animal
2	2	6	Directhr	Director
2	3	2	080	0.80
2	3	2	655	6.55
2	5	2	ony	only
7	2	1	சென்னை	சென்னித்

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY CHENNAI
சத்யமேவ ஜெயதே
TRUTH ALONE TRIUMPHS

செ.சு. ஞானசிராமன்,
செயலாளர்.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS